මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/55** **2024.08.29**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21
## அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடுதலும் அதற்குரிய செல்லுபடியான அடையாள அட்டைகளும்

2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடுதல் பின்வருமாறு அந்தந்த அலுவலகங்களிலும் நாட்களிலும் இடம்பெறும்:-

<table>
<tr><th>தொ. இல.</th><th colspan="2">அலுவலகம்</th><th>அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் திகதி</th></tr>
<tr><td rowspan="2">I</td><td colspan="2">• மாவட்ட செயலகங்கள்</td><td rowspan="2">2024.09.04</td></tr>
<tr><td colspan="2">• தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகங்கள்</td></tr>
<tr><td rowspan="4">II</td><td>• சிரேட்ட பிரதி/ பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகங்கள்</td><td rowspan="4">சீருடை தரித்த பணியாட்குழுக்களும் அத்தகைய அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள சிவில் பணியாட்குழுக்களும்</td><td rowspan="4">2024.09.04 மற்றும் 2024.09.06</td></tr>
<tr><td>• பொலிஸ் அத்தியட்சகர்/ உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள்</td></tr>
<tr><td>• பொலிஸ் நிலையங்கள்</td></tr>
<tr><td>• விசேட அதிரடிப் படை, விசேட பொலிஸ் பிரிவுகள், பிரபுக்கள் பாதுகாப்புப் பிரிவுகள்</td></tr>
<tr><td rowspan="2">III</td><td>• முப்படை முகாம்கள்</td><td>-மேற்படி-</td><td rowspan="2">2024.09.05 மற்றும் 2024.09.06</td></tr>
<tr><td colspan="2">• ஏனைய அனைத்து அரச நிறுவனங்கள்</td></tr>
<tr><td>IV</td><td colspan="2">மேலே I, II, III ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் அஞ்சல் வாக்கு அடையாளமிட முடியாதிருக்கும் அஞ்சல் வாக்காளர்களுக்கு தாம் தொழில் புரியும் இடம் அமைந்துள்ள மாவட்டத்தில், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில்.</td><td>2024.09.11 மற்றும் 2024.09.12</td></tr>
</table>

02. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக பின்வருவனவற்றில் ஏதேனுமோர் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவது ஒரு கட்டாயத் தேவைப்பாடாகும்.

**I. தேசிய அடையாள அட்டை;**
**II. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்;**
**III. செல்லுபடியான கடவுச்சீட்டு;**
**IV. தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை.**

03. அலுவலகமுறை அடையாள அட்டை அஞ்சல் வாக்களிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றபோதும், கடந்த தேர்தல்களை அடுத்து அது சம்பந்தமாக அறியக்கிடைத்த விடயங்களையும் கவனத்திலெடுத்து, இத்தேர்தலின் போது அஞ்சல் வாக்காளர்கள் தமது அலுவலகமுறை அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பார்களாயின், அத்தகைய அஞ்சல் வாக்காளரை அடையாளம் காணல் அன்றேல் ஆளடையாளத்தைப் பரிசோதித்தல் மற்றும் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் பணி தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நியமிக்கப்பட்டுள்ள அலுவலரினால் மேற்பார்வை செய்யப்படும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில், அலுவலகமுறை அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கும் அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு வாய்ப்பளிக்கக் கூடாதென்று அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்